எனது இல:என்ஈபி/சிஓ/திட்/பொது/5/98
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

04.06.98.

<u>சுற்றறிக்கை இல. 5/98</u>

சகல ப.நோ.கூ.ச தலைவர்களுக்கும் ,
பாரியளவு கூட்டுறவுச்சங்கத் தலைவர்களுக்கும்.

## ப.நோ.கூ.சங்கங்களினதும், ஏனைய பாரியளவு கூட்டுறவுச் சங்கங்களினதும் தலைவர்களுக்கான படிகள் வழங்குதல்

மேற்படி விடயம் தொடர்பாக 1992.09.08, 1991.10.08, 1993.08.11 ஆகிய திகதிகளில் என்னால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் பின்வரும் அடிப்படையில் மேற்படி கொடுப்பனவுகள் வழங்க அனுமதிக்கப்படுகிறது. இச்சுற்றறிக்கை 98.06.01 திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் . கூட்டுறவுச் சங்கமொன்றின் மாதாந்த மொத்த மேல்மிகையின் அடிப்படையில், கீழே காட்டப்பட்டுள்ள உச்ச எல்லைகளுக்குட்பட தத்தமது சங்கத்தின் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட நெறியாளர் குழுவின் தலைவர் ஒருவருக்கு மாதாந்தம் படி வழங்கப்படலாம்.

| | மாதாந்த மொத்த மேல்மிகை | மாதாந்தம் வழங்கக்கூடிய படியாக உச்ச அளவு |
|---|---|---|
| அ. | ரூபா 25,000/- வரை | ரூபா 1250/- |
| ஆ. | ரூபா 25,001/- இல் இருந்து ரூபா 50,000/- வரை | ரூபா 1500/- |
| இ. | ரூபா 50,001/- இல் இருந்து ரூபா 75,000/- வரை | ரூபா 1750/- |
| ஈ. | ரூபா 75,001/- இல் இருந்து ரூபா 100,000/- வரை | ரூபா 2000/- |
| உ. | ரூபா 100,0001/- இல் இருந்து ரூபா 150,000/- வரை | ரூபா 2250/- |
| ஊ. | ரூபா 150,001/- இற்கு மேல் | ரூபா 2500/- |

<u>குறிப்பு:</u>
மொத்த மேலதிகம் அல்லது மொத்தக் குறைவு எனப்படுவது ஒரு சங்கத்தின் ஒவ்வொரு வியாபார அல்லது தொழிற்பாட்டுப் பிரிவுகளிலிருந்தும் பெறப்படும் மொத்த வருமானத்திலிருந்து, அவ்வப் பகுதிகளுக்காக ஏற்படும் சகல நேர் செலவினங்களை கழித்த பின்னர் கிடைக்கப் பெறும் மிகுதிகளின் கூட்டுத் தொகையாகும். பொது இலாப நட்டக்கணக்கிற்கு செலவு அல்லது வரவு வைக்கப்படும். வைப்புகள் சம்மந்தமாக ஈட்டும் வட்டி போன்ற வருமானங்கள், பொது நிர்வாகச் செலவுகள் போன்றன மொத்த மேல்மிகை கணிக்கும் பொழுது கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படலாகாது. சங்கத்தின் மாதாந்த மொத்த மேல்மிகையை மேற்கூறியவாறு சரியான முறையில் தயாரிக்க வேண்டியது, சங்கத்தின் கணக்காளர் ,பொது முகாமையாளர் ஆகியோரது கடமையாகும்.

வரையறைகள்:

1. ஒரு சங்கம் மேல்மிகையை மாதாந்தம் ஈட்டாது நட்டத்தில் இயங்கும் சந்தர்ப்பங்களிலும், மேற்கூறப்பட்ட அட்டவணையின் முதலாவது நிரலில் காணப்படும் ஆகக்குறைந்த தொகையான ரூபா.1250/- மட்டும் படியாக ஒரு தலைவர் தனது செய் கடமைகளுக்காக பெற்றுக் கொள்ளலாம்.

2. உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கமொன்றின் தலைவருக்குள்ள கடமைகள் பொறுப்புக்களின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட எல்லைகளை கருத்திற்கொள்ளாது படிகள் வழங்கப்படலாம். அவ்வாறு கூடிய படியினை வழங்குவதற்கு ஒரு சங்கம் கருதுமாயின், அதற்கு பொதுச்சபையின் அனுமதியுடன் / எனது முன் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

3.

3.1 ப.நோ.கூ.சங்கம் அல்லது பாரியளவு கூட்டுறவுச் சங்கமொன்றில் தெரிவு மூலம் பதவிக்கு வரும் தலைவர் ஒருவர் அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபன உத்தியோகத்தராக இருப்பினும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு தனது படியினை மாதாந்தம் பெற்றுக்கொள்ளலாம்.

3.2 ரூபா.250/- ற்கு மேல் தலைவர் படியினை மாதாந்தம் பெறும் 3(1)இல் கூறப்படும் உத்தியோகத்தர்கள் தாபனக்கோவை 1வது பந்தியின் க.2வது பிரிவின் படி (அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) தான் பெற்றுக் கொள்ளும் படிகளின் 10%த்தினை திரட்டிய நிதிக்கு செலுத்துதல் வேண்டும். இவ்வாறு கழிக்கப்படும் 10% நிதி முறையே அவ்வவ் உத்தியோகத்தர்களது திணைக்கள தலைமை அலுவலகங்களுக்கு பின்னர் அனுப்பப்படுதல் வேண்டும்.

3.3 அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் , கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் , தலைவர் பதவிக்கு பெயர் குறித்து நியமிக்கப்படின், அவர் தனது திரட்டிய சம்பளத்தின் 1/3 பங்கு அல்லது ரூபா.1500/-. இவற்றில் எது குறைவானதோ, அத்தொகையை மாதாந்தம் தலைவர் படியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவற்றினை வழங்க முன் 3(2)ம் பந்தியில் குறிப்பிட்டவாறு திரட்டிய நிதிக்கு 10% தொகை கழித்த பின்னர் மீதித்தொகையை வழங்க வேண்டும். இப் 10% தொகையையும் மேற்குறிப்பிட்ட பிரகாரம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புதல் வேண்டும்.

4. ஒன்றுக்கு மேற்பட்ட ப.நோ.கூ.சங்கம் அல்லது வேறு பாரிய கூட்டுறவுச் சங்கங்களில் சம காலத்தில் ஒருவர் தலைவராகப் பணிபுரிவாராயின், அவர் தமக்குரிய படியினை ஒரு சங்கத்திலோ அல்லது பொருத்தமான விகிதாசாரத்தில் குறித்த பதவியினை வகிக்கும் சகல சங்கங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும் சகல சங்கங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளும் படியானது மேல் அட்டவணையிலும் 1, 2, 3(1)ம் பந்திகளிலும் குறிப்பிட்டதற்கமைய, ஏதாவது ஒரு சங்கத்தின் உச்ச எல்லைக்கு மேற்படலாகாது. சம்பந்தப்பட்ட சங்கங்களின் மொத்த மேல்மிகைகளின் அடிப்படையில் உச்ச எல்லை தீர்மானிக்கப்படல் வேண்டும்.

5. ஏதாவது ஒரு மாதத்தின் பொருட்டு தலைவர் ஒருவருக்கு வழங்க வேண்டிய படியானது முந்திய மாதத்தின் மொத்த மேலதிகத்தின் அடிப்படையில் அடுத்த மாதம் 25ம் திகதிக்கு முன்னர் வழங்கப்படலாம்..

6. தலைவர் படி வழங்குவது தொடர்பாக மேல் அட்டவணையிலும் 1, 2, 3(1)ம் பந்திகளிலும் கூறப்பட்டவாறான உச்ச எல்லைக்கு அமைவாக பெறக்கூடியவாறு சங்கத்தின் நடைமுறை விதியை பொதுச்சபையின் அனுமதியுடன் திருத்திக்கொள்ளல் வேண்டும். சங்கத்தின் பொதுச்சபை செயலிழந்து இருக்குமிடத்து, இயக்குநர் சபையின் அனுமதியுடன் எனது அனுமதியைப் பெற்று கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

7. சங்கமொன்றின் தலைவர் ஒருவர் சுகயீனம் அல்லது விசேட காரணங்களுக்காக நீண்டகாலம் கடமைக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து, அச்சங்க உபதலைவர் தொடர்ச்சியாக ஒரு மாதத்திற்கு மேல் பதில் தலைவராகக் கடமையாற்றுவாராயின் அவர் நெறியாளர் குழுவின் அனுமதியுடன் குறித்த ஒரு முழு மாத தொகையினை மட்டும் படியாகப் பெற்றுக் கொள்ளலாம். குறை மாதங்கள் கணக்கில் எடுக்கப்படலாகாது.

8. சங்கத்தின் தலைவர் ஒருவர் தனது அன்றாட கடமைகளை மேற்கொள்வதற்காக சங்கத்திற்கு வீட்டிலிருந்து பிரயாணம் செய்தமைக்காக படி எதனையும் பெற்றுக்கொள்ளல் ஆகாது.

9. இக்கொடுப்பனவுகளை வழங்கக் கூடிய பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விபரம் வருமாறு:
1. சகல ப.நோ.கூ.சங்கங்கள்.
2. மாவட்ட கூட்டுறவுச் சபைகள்.
3. பனைஇ தென்னைஇ வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள்.
4. பனைஇ தென்னைஇ வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
5. ஏனைய 2ம்படி கூட்டுறவுச் சங்கங்கள்.

10. மேற் குறிப்பிடப்படாத கூட்டுறவுச் சங்கமொன்றின் தலைவருக்கு அட்டவணையில் காட்டியவாறு படி வழங்க விரும்பின் அச்சங்கம் தனது நிதி நிலையையும் பாரிய சங்கம் என நிரூபிக்கக் கூடிய சான்றுகளையும், கூட்டத்தீர்மானங்களையும் ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அவரது அனுமதியை பெற்ற பின்னரே அவ்வாறான கொடுப்பனவு ஒன்றைச் செய்யலாம்.

க.சண்முகலிங்கம்,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வகி)

பிரதிகள்: 1) செயலாளர்,
விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன , கூட்டுறவு, கடற்றொழில் அமைச்சு. (வகி). - அறிதலுக்காக.

2) சகல கூ.அ.உ.ஆணையாளர்களுக்கும். - "
3) அதிபர், கூட்டுறவுக் கல்லூரி (வ.கி திருகோணமலை) - "